www.tamilarangam.net

# புதிய பாதை

PEOPLES LIBERATION ORGANIZATION OF THAMILEELAM — DEMOLISH ALL REPRESSION — PLOT

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகார பூர்வஏடு

காதம் 2 | டிசம்பர் 1984 | அன்பளிப்பு 1-50 | சுவடு 24

## தமிழீழ மக்கள் மீது சிங்கள அரசு தொடுத்துள்ள யுத்தம்

தமிழீழ மக்கள்மீது சிங்கள அரசு தனது யுத்த பிரகடனத்தை வெளியிட்டுள்ளது. தமிழீழ கடற்கரையோரங்களில் சுமார் 400 கி.மீ பகுதியை தடைசெய்யப்பட்ட பிரதேசமாக அறிவித்துள்ளது. தனியார் வாகனங்களின் பாவனைக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலைச் சிறுர்கள் வீதியில் நடமாடுவதற்கு கூட கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

கடற்கரை பிரதேசத்தை தடைசெய்யப்பட்ட பிரதேசமாக்கியதால் 2 இலட்சத்திற்கும் அதிகமானோர் தமது தொழில்களை இழந்ததுடன் தமது குடியிருப்புகளையும் இழந்து நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர். எரிபொருள் விநியோகத்தில் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடானது பல ஆயிரக்கணக்கான தமிழ் விவசாயிகளை கடுமையாக பாதித்துள்ளது. தனியார் வாகனம் பாவிப்பதற்கும் வீதியில் நடமாடுவதற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தமிழீழ மக்களின் அன்றாட அலுவல்கள் அனைத்திலும் நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது.

இதுபோன்று காங்கேசன் துறை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த சரக்குக் கப்பலில் வெடிகுண்டு வைக்கப் பட்டிருந்ததாக புரளி கிளப்பி விடப்பட்டுள்ளது. இது வரும் காலத்தில் வடமாகாணத்திற்கான உணவு விநியோகத்தை நிறுத்துவதற்கு அரசு வேண்டுமென்றே செய்த சதியாகும். யாழ் மாவட்டத்தில் நுழைபவர்கள் பொலிசாரின் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் அங்கு வசிப்பவர்கள் அடுத்த வீட்டிற்கு செல்வதாயின் தகுந்த காரணம் காட்ட வேண்டும் எனவும் கேட்கப்பட்டிருக்கிறுர்கள். இச்சட்டங்களை காரணம் காட்டி தமிழீழத்தில் எந்த ஒரு குடிமகனையும் கொலைசெய்யும் அதிகாரத்தை விரிவாக அரசு பெற்றுள்ளது.

இதேபோன்று அண்மையில் நடந்த சில சம்பவங்களை சாட்டாகக்கொண்டு தமிழீழப் பகுதிகளில் வாழும் சிங்கள மக்களுக்கு ஆயுதங்களை வழங்க சிங்கள அரசு ஆரம்பித்துவிட்டது. இதன் விளைவுகள் திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் தெரியஆரம்பித்துள்ளன. திரியாய், தென்னமரவாடி போன்ற பகுதிகளில் புகுந்த இராணுவத்தினரும் சிங்கள காடையரும் அந்த பாரம்பரிய தமிழ் கிராமங்களை தீயிட்டதுடன் தமிழ் மக்களையும் தாக்கியுள்ளார்கள். இதில் பலர் மோசமாக காயப்பட்டதுடன் முல்லைத்தீவு, புல்மோட்டை பகுதிகளுக்கு அகதிகளாக் வெளியேறியுள்ளார்கள்.

கடந்த சில வாரங்களாக தமிழீழத்திலும், சிறீலங்காவிலும் பல நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ்மக்கள் அரசு கூலிப்படையினராலும், சிங்கள காடையராலும் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். வவுனியா இராணுவ முகாமை விடுதலைப் போராளிகள் தாக்கியதாக நாடகமாடி மீண்டும் ஒரு வெலிக்கடைப் படுகொலையை நிகழ்த்தியுள்ளார்கள். இதில் இருபதுக்கும் அதிகமான அப்பாவி இளைஞர்கள் கொலைசெய்யப்பட்டார்கள்.

இந்தச் சம்பவங்களை எல்லாம் தொகுத்துப் பார்க்கும் எவரும் இதை தமிழீழத்தின்மீது சிங்கள அரசு தொடுத்துள்ள போரே என்பதை இலகுவாக இனம் கண்டு கொள்ளலாம். தமிழீழ மக்களைப்

(11-ம் பக்கம் பார்க்க)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது நோக்கு

தமிழ் மக்களின் போராட்ட வரலாறு ஒரு படிமுறை வளர்ச்சியைக் கொண்டது. போராட்டமானது ஆரம்ப கட்டங்களில் மொழி உரிமைக்கான, பிரதேச பாதுகாப்புக்கான கோசங்களே முன்வைக்கப்பட்ட தேசிய வாதமாக இருந்தது. தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது இது தேசிய வாதிகளின் பிரிவினைக் கோசமாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து மக்களின் போராட்ட உணர்வுகள், விடுதலைப் போராளிகளின் உழைப்பு, தியாகங்கள் என்பன இந்த போராட்டத்தை தமிழ் மக்களின் அடிப்படை உரிமைக்கான - உயிர் வாழும் உரிமைக்கான - விடுதலைப் போராட்டமாக சர்வதேச அரங்கில் அறிமுகப்படுத்தியது. இயக்கங்களின் வர்க்கரீதியிலான அணுகுமுறையும் அவர்களின் கடுமையான பிரச்சாரங்களும், ஸ்ரீலங்காவின் அரச பயங்கரவாதம் பகிரங்கமாக கட்டவிழ்த்து விடப்படுவதற்கு முன்புவரை சரியான இலக்குகளை தேர்ந்தெடுத்து சரியான நேரத்தில் நடத்திய தாக்குதல்களும் தமிழீழப் போராட்டத்தை அதன் தேசிய எல்லைகளுக்கு அப்பால் உலகப் புரட்சியின் ஒரு அம்சமாக சில உலகநாடுகள் அனுதாபத்துடன் நோக்க ஏதுவாயின. தமிழீழப் போராட்டமானது இனவாதக் கறைகளை தாண்டி புரட்சிகர அம்சங்களை பெற்றதானது சிங்கள முற்போக்கு அணிகள் கூட இப் போராட்டத்துடன் தங்களை இணைத்துக் கொள்ளவும் தூண்டியது.

இதுவரைகாலமும் எமது போராட்டம் பெற்று வந்த அனைத்து புரட்சிகர அம்சங்களையும் இழந்து அதனை இனவாதச் சேற்றுக்குள் அமிழ்த்துவது போன்ற சில சம்பவங்கள் அண்மையில் நடைபெற்றுள்ளது வருந்தத்தக்கதாகும்.

கென்ட், டொலர் பண்ணைகளில், கொக்கிளாய், நாயாறு போன்ற மீன்பிடிக் கிராமங்களில் நடைபெற்ற தாக்குதல்களும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்களும், இவற்றின் பிரதிபலிப்பாக சிங்கள காடையர்களும், இராணுவமும் நடத்திய அப்பாவித் தமிழர்கள் மீதான பயங்கரத் தாக்குதல்களும் கொலைகளும் இனவெறியின் வெளிப்பாடு என்பதாகவே ஸ்ரீலங்கா அரசினால் பிரச்சாரப்படுத்தப்படுகிறது.

டொலர், கென்ட் பண்ணைகளில் கொலை செய்யப்பட்டவர்கள் சாதாரண விவசாயிகள் அல்ல என்பதும் 77ம் ஆண்டு நடைபெற்ற கலவரங்களின்போது அகதிகளாக வந்து குடியேறிய மலையக மக்களை பலவந்தமாக வெளியேற்றிய பின்பு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை எதிர்காலத்தில் கடினமாக்கும் நோக்குடன் குடியமர்த்தப்பட்ட இவர்கள் பயிற்சி அளிக்கப்பட்ட பயங்கர குற்றவாளிகள் என்பதுமே உண்மையாகும். விடுதலைப் போராட்டத்தை சிங்கள மக்களுக்கு எதிரான இன அழிப்புச் செயலாக சிங்களவர்கள் மத்தியிலும் வெளியுலகத்திற்கும் காட்டவேண்டும் என்ற கபட நோக்கத்துடன்தான் இதனை சிங்கள அரசு மிகக் கவனமாக திட்டமிட்டு செய்துள்ளது.

இதன் தாத்பரியங்களை சிங்கள மக்கள் மத்தியிலும் வெளியுலகிற்கும் அம்பலப்படுத்தாமல் ஒரு தாக்குதலை நிகழ்த்துவது அரசு விரித்த வலையில் சிக்குவதற்கே சமனாகும். இத்துடன் கூடவே கொக்கிளாய் நாயாறு சம்பவங்களும் அதற்கு பின்னர் நடைபெற்ற சம்பவங்களும் அதன் விளைவாக தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளும் சிங்கள மக்களின் நடவடிக்கைகளும் எமது போராட்டத்திற்கு பாதகமான விளைவுகளையே கொடுத்துள்ளன. இச் சம்பவங்கள் அனைத்து சிங்கள மக்களையும் அரசு நடவடிக்கைகளிலிருந்து அந்நியப்படுத்துவதற்கு மாறாக அரசுடன் இணைந்து தேசபக்த யுத்தத்தில் போராடுவதற்கான சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது. அத்துடன் வெளிநாடுகளில் எமது அந்தஸ்தை விடுதலைப் போராளிகள் என்ற

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலையிலிருந்து பயங்கரவாதி கள் என்ற நிலைக்குத் தாழ்த்தி விட்டது. டென்மார்க் போன்ற பல நாடுகள் அங்கு தஞ்சம் புகுந்துள்ள தமிழ் இளைஞர்களை வெளியேற்றுவது பற்றி ஆலோசிக்க ஆரம்பித்து விட்டது என்றால் சர்வதேச அரங்கில் இதன் தாக்கங்களைப் புரிந்துகொள்ளலாம்.

இத்தாக்குதல்களினால் எமது பிரதேசங்களை ஆக்கிரமிப்பிலி ருந்து மீட்பதாக தாக்குதல் களை நடத்தியவர்கள் பறை சாற்றினாலும் உண்மையில் எமது மக்கள் பாரம்பரிய பிர தேசங்களிலிருந்து - திருகோண மலை வவுனியா மாவட்டங்களி லிருந்து-வெளியேறும் சம்பவங் கள்தான் நடைபெற்றுள்ளன. இச் சம்பவங்களைக் காரணமாக கொண்டு சிங்கள காடையர் கள் ஆயுதமயப் படுத்தப்பட் டுள்ளனர். இதுபோன்ற பின் விளைவுகளைப் பற்றி தூரப் பார்வை இல்லாத அல்லது இதனைப் பற்றி அக்கறைப் படாத எந்த ஒரு இயக்கமும் பொறுப்புள்ள விடுதலை இயக் கமாக, மக்களை நேசிக்கும் இயக்கமாக இருக்க முடியாது.

இன்றும் சிலர் சென்னையிலி ருந்து கொண்டு தாக்குதல் பற் றிய முன்னெச்சரிக்கைகளை அடிக்கடி வெளியிட்டு மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்ப டுத்துவதுடன் மக்களுக்கு தேவையற்ற இடர்களைத்தோற் றுவிப்பது தவிர்க்க வேண்டிய தாகும். ''அடுத்த பொங்கல் தமிழீழத்திலே'' என்று மாயைகளை ஏற்படுத்தி அவர் கள் கற்பனையிலே மூழ்க வைப் பது வருந்தத் தக்கது.

மக்களுக்கு விடுதலைப் போராட்டங்களின் கடினங்க ளையும், அவர்கள் செய்யவேண் டிய அர்ப்பணிப்புக்களையும் விளக்கி அவர்களை எமது பங் காளிகளாக்க வேண்டுமே யன்றி 'யாராலோ எப்படியோ கிடைக்கப் போகும் விடுதலை யைப் பற்றிய மாயையில் மூழ்க வைப்பது முழு விடுதலைப் போராட்டத்திற்கு ஆபத்து விளைவிக்கக் கூடியது என்பதை மறக்கக் கூடாது,

# அம்மா உனக்குத்தான்...

உமா

2


புறப்பட்டேன்...
புதியதொரு பாதையில்
பாதி வழியினிலே
தளைப்பட்டேன்
பாதகமில்லை
என் இயக்கம்
ஒரு பெரிய ஆலமரம்
நான் ஒரு சிறிய அருகம்புல்லுதான்
அம்மா!
இப்போது புரிகிறதா உனக்கு?
என் தோழர்கள் எல்லோரும்
உன் பிள்ளைகள் என்று
கண்ணீரைச் சிந்தாதோ!
அது இப்போது
எனக்கு வேண்டாம்
இயலுமானால் கடமையைச் செய்
நீ எனக்காக எதுவும்
செய்யவிரும்பினால்
என் தோழர்களை நேசி
உன்போல் பிள்ளைகளைப்
பிரிந்துவாழும்
என் மற்ற அன்னையருக்கு
ஆறுதல் கூறு
தங்கைகளை, தம்பிகளை
என் தோழர்களாகமாற்று
முடியுமானால்
கார்க்கியின் தாயைப்போல
இல்லாவிட்டாலும்
தமிழீழத்தின் தாயாகவாவது
கடமையாற்று.
முடிவில் ஒன்று
என் அருமை அம்மா!
இன்று நாமாவது
மெழுகுகளாக எரிந்தால்
நாளை மெழுகுகளே
எரியத்தேவை இராது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# P.F.L.P இன் 17 வது ஆண்டு நிறைவு... P.L.O.T இன் வாழ்த்துச் செய்தி...



P.F.L.P தலைவர் ஹபாஸ்

தொழிலாளர்கள், விவசாயிகள், குட்டி பூர்ஷ்வா பிரிவினர் ஆகியோரே ஏகாதிபத்தியத்தையும் ஸயோனிசத்தையும் எதிர்த்து நிற்பவர்கள் என்ற அனுபவத்தை அடியாதாரமாகக்கொண்டு, பலஸ்தீன தேசிய போராட்டத்திற்கு ஒரு தெளிவான வர்க்கத்தன்மையைக் கொடுக்கவேண்டுமென உணர்ந்ததனாலேயே 17ஆண்டுகளுக்குமுன் டிசம்பர் 11ஆம் திகதி பலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (PFLP) உருவாயிற்று. மார்க்ஸிஸ — லெனினிய கோட்பாடுகளினடிப்படையில் ஏகாதிபத்திய, ஸயோனிச சக்திகளுக்கெதிரான இடைவிடாத 17 வருட போராட்டத்தையே இந்த டிசம்பர் 11ஆம் திகதி குறித்து நிற்கிறது.

இந்த தொடர்ச்சியான ஆண்டுகளில், தனது சரியான பகுப்பாய்வின்மூலம் PFLPயினால் பலஸ்தீன தேசிய போராட்டத்தைத் தலைமை தாங்கவும், வழிநடத்தவும் முடிந்ததோடு ஏகாதிபத்திய ஏஜெண்டுகளினால் உருவாக்கப்பட்ட பொறிகளிலும், படுகுழிகளிலும் விழுந்துவிடாமலிருக்க உதவவும் முடிந்தது.

இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் மிக இக்கட்டானதோர் கட்டத்தையே பலஸ்தீன மக்கள் விடுதலை இயக்கம் கடந்துகொண்டிருக்கின்றது.

லெபனான் ஆக்கிரமிக்கப்படுவதற்கு முன்னர், பலஸ்தீன மக்களின் ஏகப்பிரதிநிதியான பலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) ஏகாதிபத்திய ஸயோனிஸ சக்திகளையும் ஏஜெண்டுகளையும் எதிர்கொள்ளக்கூடியதான ஒரு அரசியல், இராணுவ, பொருளாதார அடித்தளத்தை லெபனானில் கட்டியெழுப்பிற்று.

லெபனானில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பும், அதைத்தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுமே பலஸ்தீன போராட்டத்தில் தேசிய ஜனநாயக இயக்கங்கள் அனுபவித்த பின்னடைவுகளுக்குக் காரணமாகும்.

ஒரு புறத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் இஸ்ரேலிய இராணுவ நிலைகளை இந்த நடவடிக்கைகள் பலப்படுத்தியதோடு அனைத்திறகும்மேலாக அது அப்பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிலையையும் பலப்படுத்திற்று.

ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, அப்பகுதியில் அமெரிக்கா பொலிஸ்காரனாக அல்லது பாதுகாவலனாக இருக்கக்கூடியதாய், பலஸ்தீன விடுதலை இயக்கத்தை (PLO) ஒரு நலிவான நிலைமையில் பேச்சுவார்த்தைகளுக்கு இழுத்துவிடுவதன் மூலம் அரபு ஆட்சிகளும் PLOவைச் சிதைக்க முயன்றுவந்துள்ளன.

துரதிர்ஷ்டவசமாக பூர்ஷ்வாசக்திகளே ஆதரவு பெற்று இயக்கத்தை நலிவாக்கி வந்தன. இயக்கத்திற்குத் தற்காலிகமாக ஏற்பட்ட பின்னடைவினாலேற்பட்ட மனக்கசப்புக்கு இடமேற்பட்டு விட்டதனால் பலஸ்தீன இயக்க ஐக்கியத்தில் பிளவுபடுத்தும் பொருட்டு இஸ்ரேலுக்கு இடமளிக்க வேண்டுமெனவும் அவர்கள் வாதிட்டு வருகின்றனர்.

இவ்வித சூழலில் பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்குத் தனது முழுமையான ஒருமைப்பாட்டைச் செலுத்தி வரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமானது (PLOT), பலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியின் (PFLP) இலட்சியங்கள் கொள்கைகளுடன் தன்னைத் தெளிவாக இனம் காட்டிக்கொள்கின்றது தமது தாயகத்தை விடுவிப்பதற்கான போராட்டத்தில் பலஸ்தீன மக்களுடன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தன்னை இணைத்துக் கொள்கின்றது பலஸ்தீன இயக்கத்திற்கு மிகவும் இக்கட்டான இந்தக் காலகட்டத்தில் பாலஸ்தீன மக்களையும், அவர்களின் இலட்சியத்தையும் பலஸ்தீன புரட்சியையும் எக்காலத்திலும் அழிக்க முடியாது என்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் நம்புகிறது. இன்றைய பின்னடைவு நிவர்த்தி செய்ய முடியாததல்ல என்றும் அது கருதுகிறது. பலஸ்தீன தேசத்தை ஒழித்துக் கட்டுவதற்காக ஏகாதிபத்தியவாதிகளும் ஸயோனிஸவாதிகளும் கடந்த

(10-ம் பக்கம் பார்க்க)

**பாதிப்புரட்சியைத் தூண்டிவிட்டு பின் வாங்குபவர்கள் உண்மையிலேயே புரட்சிக்குத் துரோகம் இழைத்தவர்களாவர்.**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஒரு தந்தையின் நல்லாசி!

**விடுதலைப் போராளிகளின் பெற்றோரின் உணர்வுகளை யதார்த்தமாக வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இக் கடிதத்தை அப்படியே பிரசுரிக்கின்றோம்**

சாய்ராம்

பிரான்சு
18/10/84

என் அருமை வீர மகனுக்கு :

என் அன்பும், முத்தங்களும், நல்லாசியும் உரித்தாகுக

நான் இங்கு நல்ல சுகமே இருக்கிறேன். நீயும் சாயி அருளால் சுகமே இருப்பாய் என நம்புகிறேன்.

உனதும் அம்மா, [redacted], [redacted], சுகமே உள்ளோம். அத்தான் ஜெர்மனி போய் விட்டார். அக்காவும் இன்று 18/10ல் அங்கிருந்து ஜெர்மனி புறப்படுகின்றா.

நாங்கள் வயது வந்தவர்கள் எமது இனத்திற்கு சுதந்திரம் வேண்டி 25 வருடங்கள் சாத்வீகப் போராட்டம் நடத்தி தோல்வி கண்டு விட்டோம். நீங்கள் இளைஞர்கள் எதிர்கால சுகங்களை விட்டு தாய்நாட்டை மீட்கப் போய் விட்டீர்கள். இதை விட வேறு வழி இல்லை. ஆகவே உங்கள் வழியே சரியான வழி. வெற்றி கிடைக்க இறைவனை வேண்டுகின்றேன்.

நீ உன் இயக்க கட்டுப்பாடுகளுக்கு அமைய நடந்து நல்ல விதமாக வர வேண்டும் என்பதே என் ஆசை உன்னைப் பெற்ற அம்மாவின் ஆசையும் அதுவே. ஆகவே நீ மனம் சோராமல் நல்ல விதமாக வர வேண்டும்.

நமது உயிரை விட மேலானது நம் சுதந்திரம். இதை உங்கள் தலைவர் எமது இனத்திற்கு எடுத்துக் கொடுத்தார். உங்களை எமது இனம் வாழ்த்தும். என் மகனும் சேர்ந்து நம் இனத்திற்கு சுதந்திரம் வேண்டிப் போராடுகிறான் என்ற மகிழ்ச்சியில் நானும், அம்மாவும் ஆனோம்.

உன்னைப் போல் ஒரு வீர மகனைப் பெற்றதிற்காக நாம் சந்தோசப்படுகிறோம். இந்த சின்ன வயதிலேயே உனக்கும், உன் சக நண்பர்களுக்கும் இந்த சுதந்திர தாகம் வந்து, உங்கள் சுக போகங்களை மறந்து எமது இனத்தின் விடுதலைக்கு உங்கள் உயிரையே தியாகம் செய்ய நீங்கள் அனைவரும் புறப்பட்டதை நினைக்க சந்தோசம் பூரிக்கிறது. வாழ்க நீங்கள் அனைவரும்.

கவலைப்படாதீர்கள் வெற்றி நிச்சயம் நமக்கு உண்டு நாம் சுதந்திரமாக நமது தமிழ் நாட்டில் ஒன்றாக வாழ்வோம்.

இக்கடிதத்தை உன் நண்பர்களுக்கும் காட்டு. உனது இயக்கம் அனுமதிக்குமானால் எனக்கு இங்கு வரும் பத்திரிகைகளில் கடிதமும் போடு.

இங்ஙனம்
அன்பு அப்பா
[redacted]

[redacted]

~~FRANCE~~

www.tamilarangam.net



# போராட்டத்தில் அரசியலும் இராணுவமும்

இராணுவத்திற்கும் அரசியலுக்கும் தொடர்பு என்பது இராணுவ அமைப்புகள் தோன்றிய காலம் தொட்டு இருந்த ஒன்று அல்ல. தொழிற் புரட்சிக்கு முன் மனித சமுதாயத்தில் பிரதானமாக விவசாய விளைபொருட்களுக்காகவும், கால் நடைகளுக்காகவும், அடிமைகளுக்காகவும், மன்னர்களின் தனி விருப்பங்களுக்காகவும் படைகள் திரட்டப்பட்டு போர்கள் நடத்தப்படலாயின. படைகளை வழி நடத்துதலிலான திறமை பெற்ற வீரர்களைப் படைத் தளபதிகளாக்கினர். பின் அத்தளபதிகள் மன்னர்களாக மாறி அரசாட்சி புரியலாயினர். செங்கிஸ் கான், அலெக்சாண்டர், நெப்போலியன் போன்றவர்கள் பெற்றிருந்த படைகளை வழி நடாத்தும் திறமையே அவர்களை தளபதிகளாகவும், மன்னர்களாகவும் உயர்த்தியது. அக்கால கட்டத்தில், அண்டை நாடுகளின் மேல் படையெடுத்து அந்நாட்டு செல்வங்களை கொள்ளையடிப்பதும் கொள்ளையடித்த செல்வத்தை பங்கிட்டுக் கொள்வதுமே படைகளின் செயல்களாக இருந்து வந்துள்ளதை உலக சரித்திரம் வெளிப்படுத்தும்.

இராணுவங்கள் பொருளாதார மேம்பாட்டிற்காக ஏனைய நாடுகளில் புகுந்து கொள்ளையடிப்பதற்காக கூட்டப்படுவதும் அவர்களின் கொள்ளைக்கான பயணம் முடிவடைந்தவுடன் படைகள் கலைக்கப்படுவதுமாக இருந்தமையால் முன் காலத்தில் நிலையான இராணுவம் என்பது நிரந்தர தேவை இல்லாத ஒன்றாக இருந்தது. நாடுகள் தங்களின் செல்வங்களைப் பாதுகாக்க இராணுவங்களைக் காட்டிலும் கோட்டைகள் கட்டிக்கொண்டு இயங்குவது எளிதானதாக இருந்த காலங்கள் அது.

தொழிற் புரட்சிக்குப்பின் தொழிற்சாலைக்கு தேவையான மூலப்பொருட்களின் தேவையும், தொழிற்சாலையில் உற்பத்தியான பொருட்களை வணிகம் செய்ய ஒரு நிலையான வர்த்தக சந்தையின் தேவையும் போர்முறைகளிலும், படைகளின் செயல்பாடுகளிலும், மிகப் பெரிய மாறுதல்களின் கட்டாயத்தை உருவாக்கியது. அவ்வகையில் பிரதானமாக தொழிற்சாலைக்கு தொடர்ந்து வருடம் முழுவதும் மூலப்பொருட்கள் கிடைப்பதை உறுதிப்படுத்தவும். உற்பத்திசெய்த பொருட்களை வர்த்தகம் செய்ய ஒரு நிலையான சந்தையின் தேவையும் ஒரு இராணுவத்தின் அவசியத்தை உணர்த்தியது.

இப் புதிய அரசியல் தேவைக்காக உருவாக்கப்படும் இராணுவமானது செங்கிஸ்கானுடைய இராணுவத்தைப் போல், செங்கிஸ்கானின் கொடூரமான மனோபாவத்தை பிரதிபலிக்கும் வகையில் அவர்கள் சென்ற இடங்களையெல்லாம் மக்களைக் கொன்று பிணக் காடுகளாக்கிக் கொண்டும், நகரங்களையும், கிராமங்களையும் சீரழித்துக் கொண்டும் செயல்பட்டதைப் போல் இராணுவத் தளபதிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைவெளிப்படுத்தும் வகையில் செயல்படாமல் இப்புதிய அரசியல் தேவைகளையொட்டி செயல்படவேண்டுமென தெளிவுற உணர்ந்தனர்.

அவ்வகையில் தொழிற் புரட்சிக்கு பின் புதிய அரசியல் தேவைகளானது உலகில் பரந்து கிடக்கும் மூலப்பொருட்களை சேகரித்து, பயிரிட்டு அம் மூலப்பொருட்கள் தொழிற்சாலைகள் வந்தடையமனித இனத்தவர்கள் அவர்கள் எவ்வினத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் உயிர் வாழ்ந்து உழைக்க கூடியவர்களாக திகழ வேண்டிய கட்டாயத்தை உணர்த்தியது.

தொழில் புரட்சியினால் ஆயுத வல்லமை பெற்ற நாடுகள் கூட மீண்டும் ஏனைய மக்களை அடிமை சமுதாய வாழ்விற்கு கொண்டு செல்ல முடியாத சூழல்களும், நிலப்பிரபுத்துவ சமுதாய சூழல்கள் தொழிற் புரட்சிக்குபின் தொழில் வளர்ச்சிக்கு தடையாக நின்றமையாலும் புதிய சமுதாய அமைப்பின் தேவையை உருவாக்கியது. அதே நேரத்தில் இப்புதிய சமுதாய அமைப்பைத் தோற்றுவிப்பதற்கும் எதிர்ப்புகள் இல்லாமல் இல்லை இந்நிலையில் முன்னைய சமுதாய அமைப்பைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் தத்துவத்தை தகர்ப்பதற்குஒரு புதிய தத்துவமும், முன்னைய சமுதாய அமைப்பைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் அரசமைப்பைத் தகர்ப்பதற்குப் புதிய அரசமைப்பும் தேவைப்பட்டது. அவ்வகையில் புதிய சமுதாயத்தை உருவாக்கக் கூடிய சக்திகளையும், உருவான சமுதாயத்தை பாதுகாக்கக் கூடிய வலிமையையும் கொண்டதாக திகழ்ந்தது, அரசமைப்பின் அங்கமான இராணுவமேயாகும். எனவே இப் புதிய சமுதாய தோற்றத்திற்காக பயன்படுத்தப்படும் இராணுவ அமைப்புகள் புதிய சமுதாய அரசியலை மையமாகக் கொண்டு செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இராணுவம் அரசியல் நோக்கங்களுக்காக மட்டுமே செயல்படவேண்டும். இராணுவம் தன்னிச்சையாக இராணுவத் தன்மையுடன் தொடர்ந்து போர் புரிந்துகொண்டு செயல்படக்கூடாது—என்ற தேவை இராணுவத்தை அரசியலின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவேண்டிய

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவசியத்தை உணர்த்தியது. அவ்வகையில் அரசியலுக்கு மூலமாக தத்துவமும், அத் தத்துவத்தை நடைமுறைப்படுத்த அரசமைப்பும், அரசமைப்பின் அங்கமாக இராணுவமும் கட்டப்பட்டன, கட்டப்பட்டு வருகின்றன. இராணுவ நடவடிக்கைகளின் அரசியல் விளைவுகள் எவ்வகையானதாக இருக்க வேண்டும் என்பதை தீர்மானித்து அவ்வரசியல் விளைவுகளை ஏற்படுத்துவதற்காக சரியான போர்த்தந்திரங்களை பயன்படுத்தி இராணுவத்தை நடத்துவதில்தான் இராணுவத்திற்கான அரசியல் தலைமையின் பாத்திரம் பெரிதும் வெளிப்படும்.

இட்லரின் பாசிச அரசியல் தலைமையிலான, ஜெர்மனிய இராணுவம் இனப்படுகொலைகளை மட்டுமன்றி மனித இனமே வெட்கப்பட வேண்டிய ஈனச் செயல்களையும் புரிந்தது. ஏனைய இன மக்களின் உடல்களிலிருந்து கடைசி சொட்டு ரத்தம் வரை வடிகட்டி ஜெர்மனிய இராணுவ வீரர்களுக்கு பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளையும் செய்தது. பாசிச தத்துவ அரசியலின் கொடுங்கோன்மை, ஏனைய முரண்பட்ட தத்துவ அரசமைப்புகளான முதலாளித்துவ, சோஷலிச அமைப்புகளை பாசிசத்திற்கெதிரான போராட்டத்தில் இணைத்தது. இவ்விணைப்பே ஜெர்மனிய இராணுவம் தோல்வியடைய காரணமாயிற்று.

பிடல் காஸ்ரோவின் அரசியல் வழிகாட்டுதல், யுத்தத்தில் பிடிபட்ட பாஸ்டிடாவின் படை வீரர்களை கஸ்ரோவின் கெரில்லா படையினர் கொன்று விடாமல் அவர்களுக்கு தங்களின் போராட்டத்தை விளக்கி விடுதலை செய்வதற்கு காரணமாக அமைந்தது. அவர்களின் இத்தகைய நடவடிக்கைகள் இராணுவரீதியாக அவர்களைகொல்வதைக் காட்டிலும் மிக அதிகமான பலனைக் கொடுத்துள்ளதை இராணுவ சரித்திர ஆசிரியர்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

எனவே இராணுவங்கள் எவ்வளவு பலமானதாக இருப்பினும் சரியான அரசியல் வழிகாட்டுதல் இல்லாவிடின் அவைகளின் ஆரம்ப கால இராணுவ நடவடிக்கைகள் எத்தகையதாக இருப்பினும் முடிவு தோல்வியாகத்தான் இருக்கும் என்பதை உணர்த்து முகமாகவேதான் இராணுவத்திற்கு சரியான அரசியல் தலைமை தாங்க வேண்டும் என்ற கூற்று முன் வைக்கப்படுகிறதே தவிர, அரசியல் வாதிகளின் தலைமையை வலியுறுத்துவதற்காக கூறப்பட்டதன்று.

''மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்காத எந்த ஒரு அரசியல் போராட்டமும் தோல்வியையே தழுவிக் கொள்ளும்— அதேபோல் அரசியல் நோக்கமற்ற எந்த இராணுவப் போராட்டங்களும் தோல்விக்கே இட்டுச் செல்லும்.''

## தோழர். வசந்தராசா (கிறிஸ்தி)



பாரந்துபட்ட மக்களின் கருவி ஏந்திய போராட்டத்தின் மூலமே தமிழீழத்திலுள்ள சிங்கள ஆட்சியை தூக்கி எறிய முடியும். இதன் மூலமே மக்கள் ஆதரவு பெற்ற ஜனநாயக குடியரசை அமைத்திட முடியும் என கிழக்கிலிருந்து போராடியவர்களில் இவரும் ஒருவர். இவர் திருகோண மலையைப் பிறப்பிடமாக கொண்டு திருமலை சென்ஜோசப் கல்லூரியில் கல்விகற்றவர். திருகோணமலையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் இணைந்து கழகத்தின் வளர்ச்சிக்கு முன் நின்று உழைத்தவர். இவர் எந்தச் சந்தர்ப்பங்களிலும் துணிவுடன் முன்நின்று போராடியவர்.

இவர் ஒரு சந்தர்ப்பத்தில் திருகோணமலை இறங்குதுறையில் பொலிசாரால் கைது செய்யப்பட்டபோது துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்ற பின்னர் நிலாவெளியில் இராணுவத்தினருடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இராணுவத்தினரால் சுடப்பட்டு காயங்களுடன் கைது செய்யப்பட்டார். இவர் இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டபோது முகாமிலிருந்து S.M.G. ஒன்றுடன் தப்பிச் சென்றார். இவரைத் தேடிச்சென்ற இராணுவத்தினர் இவரைச் சுற்றி வளைத்தபோது இவர் இராணுவத்துடன் மோதி வீரமரணம் அடைந்தார்.

"எனது வாழ்நாள் முழுவதும், தந்தை நாட்டிற்காகவும் புரட்சிக்காகவும் உள்ளத்தாலும் உடலாலும் சேவை செய்திருக்கிறேன், இந்த உலகத்திலிருந்து நான் மறையும்போது இன்னும் நீண்ட நாள் இருந்து மேலும் அதிக சேவை செய்ய முடியாமல் போய்விட்டதே என்பதற்காக அன்றி வேறு எதற்காகவும் வருந்தமாட்டேன்.

நான் இறந்த பின் எனது இறுதிச் சடங்குகளை பெரிய அளவில் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். மக்களின் நேரமும், பொருளும் விரையமாக்கப்படாமல் இருப்பதற்காகவே இதைக் கூறுகிறேன்."

—கோசிமின்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டம்

## 2

1) சகல மக்களிற்தும் சம உரிமையுண்டு. தென்னாப்பிரிக்கா இன வேறுபாடு அற்ற ரீதியில் கறுப்பர், வெள்ளையர், இந்தியர் யாவருக்கும் சொந்தம்.

2) சகலருக்கும் வாக்குரிமை அளிக்கப்படவேண்டும்.

3) சகல வளங்களும் பொது சொத்து ஆக்கப்பட வேண்டும்.

இக்கருத்துகளை அடிப்படையாக. கொண்டு சுதந்திர சாசனம் (Freedom Charter) வரையப்பட்டது

ஆ தே.கா தலைவர்கள் காந்தியின் கொள்கையால் பெரிதும் கவரப்பட்டனர். இவர்களில் பலர் காந்தி குல்லா அணிந்து கொண்டனர்.

இக்கால கட்டத்தில் தென்னாப்பிரிக்காவிலிருந்த இனப்பிரிவினை (segregation) கொள்கைகள் பின்வருமாறு :

1) தென்னாபிரிக்க மக்கள் இன ரீதியாக பிரிக்கப்பட்டனர்.

a) கறுப்பு இனத்தவர் (ஏறக்குறைய இன்று 13 மிலியன்)

b) இந்தியர்கள் (ஏறக்குறைய இன்று 1 மிலியன்)

c) வெள்ளையர் (ஏறக்குறைய இன்று 3 மிலியன்)

d) கலப்பு இனத்தவர் (ஏறக்குறைய 1 மிலியன்)

2) இம்மக்கள் தனித்தனி பகுதிகளில் வாழ்ந்தனர். உதாரணமாக டர்பன் நகரை எடுத்துக்கொண்டால் வெள்ளையருக்கு ஒரு பகுதி, கறுப்பு இனத்தவருக்கு ஒரு பகுதி, இந்தியருக்கு ஒரு பகுதி, கலப்பு இனத்தவருக்கு ஒரு பகுதி. ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்ல அதிகாரம் பெறவேண்டும். சகல மக்களும் பாஸ் (Pass) எனப்படும் அடையாள அட்டையை கொண்டு செல்ல வேண்டும்.

3) வெவ்வேறு இனமக்களுக்கிடையில் திருமணத் தொடர்பு இல்லை. அப்படியிருந்தால் விபசாரம் என கருதப்பட்டு தண்டிக்கப்படும்.

5) ஒரே வேலையைச் செய்த ஒரே தகுதியுடைய மக்களுக்கிடையில் வெவ்வேறு சம்பளநிலைகள் மேற்குறிப்பிட்ட ஒழுங்கில் உத்தியோக வாய்ப்புகளும் இல்லை.

6) நிலப்பரப்பை எடுத்துக் கொண்டால் 85% வெள்ளையருக்குச் சொந்தம். இப்பகுதிகளில் திறமான நிலவளம் கனிப்பொருள் வளம் (சுரங்கம்) உண்டு.

7) வாக்களிக்கும் உரிமை வெள்ளையருக்கு மட்டுமே. அரசு அதிகாரிகள் வெள்ளையர். மந்திரிகள்;வெள்ளையர் ராணுவம் வெள்ளையர்.

8) கறுப்பர் நலன்களை கவனிக்க, இந்தியர் நலன்களை கவனிக்க பொறுப்பான அதிகாரிகள் வெள்ளையர்.

9) கறுப்புத் தொழிலாளர்களுக்கோ விவசாயத் தொழிலாளர்களுக்கோ ஒருவித உரிமையும் இல்லை. சம்பள உயர்வைக் கோரி வேலை நிறுத்தம் செய்தால் உடனடியாக குடிபெயர்க்கப்பட்டு கறுப்பர்களுக்கென்றே நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்படுவர்.

10) மிக மோசமான அடக்குமுறை. அகிம்சை முறைப் போராட்டங்கள் துப்பாக்கிக் குண்டுகளினாலும் வேட்டை நாய்களினாலும் நசுக்கப்பட்டன.

11) கல்வி நிலைகளில் பாகுபாடு.

ஆ. தே.காவின் போராட்டங்கள் யாவும் நசுக்கப்பட்டன. 1948 தேர்தலின் பின்னர் அரசு அதிகாரம் ஆங்கில வெள்ளையரிடமிருந்து போர்ஸின் கையில் சென்றது இதன் பின்னர் அடக்கு முறையும் இன ஒடுக்கலும் அதிகரித்தது. 1960ல் தென்னாபிரிக்கா அரசு (Bantustan'') பண்டுஸ்டான் கொள்கையை முன் வைத்தது. இதன் நோக்கம் பின்வருமாறு.

85% தென்னாப்பிரிக்காவை வெள்ளையர் பிரதேசமாக்கியது. அதாவது 16% ஜனத்தொகைக்கு 85% பிரதேசம்.இங்குவாழும் கறுப்பர்களோ ஏனையவர்களோ விருந்தினர்கள். (Guests) இவர்கள் வேலை செய்ய மட்டும் இங்கிருப்பார்கள். பின்னர் 15% கறுப்பர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்ல வேண்டும். கறுப்பர்களுக்கு ஒதுக்கப்பட்ட 15% பகுதிகள் டிரான்ஸ்காய், போப்புடாஸ்வன முதலியவற்றிற்கு படிப்படியாக ''சுதந்திரம்'' வழங்கப்படும். இதன் மூலம் கறுப்பு இன மக்களும் ஏனையோரும் (வெள்ளையரைத் தவிர) நாளடைவில் தென்னாபிரிக்கவில் 85% பகுதிகளில் வாழும் உரிமையை இழந்து விடுவார்கள்.

இத்திட்டத்தையும் ''பாஸ்'' கொள்கையையும் எதிர்த்து ஆபிரிக்கதேசியகாங்கிரஸ் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியது. இந்த ஆர்ப்பாட்டங்கள் மிகமோசமாக நசுக்கப்பட்டன. இறுதியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் சார்புலி (Sharpuille) எனுமிடத்தில் பொலிஸ் சூட்டத்தினால் 70பேருக்கு மேற்பட்டவர்கள் இறந்தனர். இதன் பின்னர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தடை செய்யப்பட்டது. போராட்டத்தில் ஒருதிருப்பம் ஏற்பட்டது.ஆ.தே.கா ஆயுதப் போராட்டத்தில் இறங்கியது.

(தொடரும்)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மத்திய அமெரிக்காவில் நிக்கரகுவா கற்பிக்கும் பாடங்கள்

வடக்கு, தெற்கு அமெரிக்க கண்டங்களை இணைக்கும் நடுப் பகுதியை மத்திய அமெரிக்கா என்பர். ஒடுக்கமான இப்பகுதியில் நிக்கராகுவா, எல்சல்வடோர், கொண்டுராஸ், கொஸ்ராரிக்கா, குவாதமாலா என ஐந்து நாடுகள் உள்ளன. இதன் கிழக்குபுறம் அத்திலாந்திக் சமுத்திரமும், மேற்குப் புறம் பசுபிக் சமுத்திரமும் உள்ளன.

இந்த ஐந்து நாடுகளில் பரப்பளவில் கூடியதும் குடித்தொகையில் குறைந்ததுமான நாடு நிக்கராகுவா இதன் பரப்பளவு 130,000 ச. கி. (இலங்கையை விட பெரியது) குடித்தொகை 30லட்சமாகும்.

இங்கே கரும்பு, வாழை, காப்பி, ஆகிய முக்கிய விவசாயப் பயிர்கள் யாவும் அமெரிக்கரதும், சில மிகப் பெரிய நிலவுடமையாளரதும் ஆதிக்கத்திலேயே இருந்தது. இவர்களால் கூலி, ஏழை விவசாயிகள் அத்துமீறி சுரண்டப்பட்டனர். அத்துடன் அமெரிக்க சார்பான சோமசா தலைமையிலான சர்வாதிகார ஆட்சியினரால் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர். இவ் ஆட்சிக்கெதிராக 50 ஆண்டுகளாக தொழிலாளர், விவசாயிகள், போராட்டம் நடைபெற்றது. இதில் 50 000 மக்களுக்குமேல் கொல்லப்பட்டனர்.

இந்த ஆட்சிக்கெதிரான புரட்சிக்கு சாண்டினிஸ்ட் தலைமை தாங்கி நடத்தினர். சர்வாதிகாரி சோமாசாவால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார, சமூக, மனித அழிவு அந்நாட்டு வரலாற்றிலேயே என்றும் காணாததாகும். இந் நிலையிலும் 1979 ஜூலை புரட்சி வெற்றி பெற்றது. புரட்சியின் பின்னரும் இங்கு சோஷலிசத்தை அமைதியாக கட்டி எழுப்ப முடியாதபடி அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்றுவரை தொல்லைகளைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டேயிருக்கிறது.

## சி. ஐ. ஏ.

சென்ற ஏப்ரல் மாதம் சி. ஐ. ஏ. யின் தலைமையில் நிக்கராகுவா துறைமுகத்தில் கண்ணி வெடிகள் வைக்கப்பட்டு ஒரு எண்ணெய் கப்பல் உட்பட சில கப்பல்கள் நாசமாக்கப்பட்டன. அமெரிக்காவின் பரப்பில் இரண்டு சதவிதமான இச் சிறு நாட்டை அமெரிக்கா பெரிய தடியால் அடித்து நசுக்க முயன்று கொண்டேயிருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி றீகன் ''கம்யூனிஸ்டுகள் ஒரு அங்குல நிலத்தைக்கூட வெற்றி பெற விடமாட்டேன்'' என கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்.

அரசியல் தலைவர்களைக் கொல்லும் முறை பற்றிய கைநூல் ஒன்றை அண்மையில் சி. ஐ. ஏ. தயாரித்து விநியோகித்தது. அத்துடன் நிக்கராகுவாவில் சோவியத் தளம் அமைக்கப் போகிறது என்றும் அதற்கு வேண்டிய கருவிகள் சோவியத் கப்பலில் வருகிறது என்றும் வதந்தியைப் பரப்பி அமெரிக்காவை உஷார்படுத்தியது. இவற்றையொட்டி நிக்கராகுவா மக்களும் உஷார் நிலைப்படுத்தப்பட்டு ஐ. நா. பாதுகாப்பு கவுன்சிலில் முறைபாடு செய்யப்பட்டது. சீனா உட்பட உலக நாடுகள் அனைத்தும் அமெரிக்காவை கண்டித்தன. அத்துடன் சர்வதேச நீதிமன்றத்திலுள்ள 16நீதிபதிகளில் 15 நீதிபதிகள் அமெரிக்கா ''ஆக்கிரமிக்க முயல்கிறது' என்று அண்மையில் வழங்கிய தீர்ப்பும் அமெரிக்காவை தற்காலிகமாக ஆக்கிரமிப்பு நடத்தாது தடுத்து வைத்துள்ளது. சர்வதேச நீதிமன்றத்தில் நிக்கராகுவாவின் குற்றச் சாட்டை எடுக்க முடியாது என அமெரிக்கா வாதிட்டது. அமெரிக்க நீதிபதி ஒருவர் மட்டுமே இதற்கு சார்பாக வாக்களித்தார்.

## அமெரிக்க சதிகள்

நிக்கராகுவாவிலுள்ள சோஷலிச ஆட்சியைக் கண்டு அமெரிக்கா அஞ்சுகிறது கியூபாவில் சோசலிச ஆட்சி நிலைத்த பின்னர் வடபகுதியில் நிக்கராகுவா, எல் சல்வடோர் ஆகிய சிறுநாடுகளும் புரட்சி நாடுகளாக மாறுவதைக் கண்டு கிலி கொள்கிறது. இதைத் தொடர்ந்து கம்யூனிசம் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் பரவி விடலாம் எனவும் பயப்படுகிறது.

அமெரிக்காவின் பலத்திற்கு எதிராக இப்படியான சிறுநாடுகளை சோஷலிச நாடாக மாறி எப்படி எதிர்த்து நிலைக்க முடிகிறது, என்பதை ஏகாதிபத்தியத்தால் ஆராய்ந்து காண முடியவில்லை. இவற்றை முறியடிக்க பல்வேறு பயங்கர நடவடிக்கைகளை அமெரிக்கா கையாள்கிறது அவற்றில்சில.

- ★ நிக்கராகுவாவிற்கு செல்லும் கப்பல்களை தடுக்க முயல்வது.
- ★ கப்பல் துறைமுகத்தில் கண்ணிவெடி வைத்து கப்பல்களை நாசப்படுத்துவது.
- ★ உலக வங்கி கடன்கள், மேற்கு ஐரோப்பிய உதவிகள் கிடைக்காது தடுப்பது.
- ★ அமெரிக்கா வாங்கி வந்த முக்கிய உற்பத்தியான

ஒடுக்குமுறைகள் கூர்மையடைந்த ஒரு வர்க்க சமுதாயத்தில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. கொல் அல்லது கொல்லப்படு இதுதான் எமது சமுதாயத்தின் விதியாகும்,

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீனியை வாங்காது, மற்ற நாடுகளும் வாங்காது தடை செய்தது.

★ சி. ஐ. ஏயின் உதவியுடன் முக்கிய அரசியல் தலைவர்களை கொலை செய்வது (சில ஆண்டுகளில் 100க்கு மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டனர்)

★ எல்லை நாடான ஹொண்டுராஸ் நாட்டில் நிக்கராகுவா அகதிகளுக்கு பயிற்சி அளித்து விமானம் ஹெலிகாப்டர் உட்பட நவீன ஆயுதங்கள் வழங்கி நிக்கராகுவாவை அடிக்கடி தாக்கச் செய்வது. ஆயிரத்துக்கு மேற்பட்ட அமெரிக்க ஆலோசகர்கள் கொண்டுராசில் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களால் 9000 வலது சாரி கொரில்லாக்கள் பயிற்சி பெற்றுள்ளனர். எல்லைப் பகுதியில் அமெரிக்கா 5 விமானத் தளங்களை நிறுவியுள்ளது. இவ் எல்லை நாடே நிக்கராகுவாவிற்கு பெரிய அச்சுறுத்தலைக்கொடுக்கிறது,

இது தவிர அமெரிக்கச் சார்பான ஏனைய எல்லைப்புற நாடுகளான எல்சல்வடோர் கோஸ்க்கா ஆகிய நாடுகளாலும் அச்சுறுத்தல் நடை பெறுகிறது.

## சோஷலிசப் புரட்சியின் வெற்றி

இத்தகைய ஆபத்துக்களை எல்லாம் சமாளித்து நிக்கராகுவா நிலைப்பதற்கு ஒரே காரணம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் துன்பப்பட்ட மக்கள் சோசலிச சமூக அமைப்பில் பெற்ற விடுதலை உணர்வேயாகும். பட்ட பொருளாதார நெருக்கடிகளை எல்லாம் சமாளித்து போராடிகொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் நிக்கராகுவா மக்கள் சோவிசத் ருஷ்யாவையும் கியூபாவையும் சார்ந்து நின்று உதவிகள் பெறுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை. ஆனால் அமெரிக்கா இதனையே எதிர்க்கிறது.

## எங்களாலும் முடியும்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடிய நிக்கராகுவா எல்சல்வடோர் போன்றவை பெற்ற வெற்றி, தோல்விகள் எமக்கு பல பாடங்களை கற்பிக்கிறது. மக்கள் ஒன்றுபட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடின் எத்தகைய ஆயுத பலத்தாலும் அவர்களை வீழ்த்திவிட முடியாது என்பதை வியட்நாமில் முன்னர் நாம் கண்டதுபோல் மத்திய அமெரிக்காவில் இன்று காண்கிறோம். அமெரிக்காவின் அயலிலே வாழ்ந்து கொண்டே சோஷலிசப் புரட்சியை தொடர்ந்து நிக்கராகுவா மக்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

8000 மைல்களுக்கப்பாலும் அமெரிக்கா தன் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை இலங்கையில் ஜே.ஆர். தலைமையில் நிலை நிறுத்த முயல்வதைக் காண்கிறோம், இச்சர்வாதிகாரத்தை விரட்ட இன்று தமிழீழ புரட்சியாளர்கள் போரிட்டுக் கொண்டிருக்கின்றனர். 30லட்சம் நிக்கராகுவா மக்களால் சாதிக்க முடிந்ததை எம்மாலும் நிச்சயமாக சாதிக்க முடியும். இதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

★

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

30ஆண்டுகளாகவே முயற்சித்து வருகின்றனர். ஆனாலும் அதை அவர்களால் செய்ய முடியவில்லை, இனியும் செய்ய முடியாது.

பலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியின் இந்த 17வது ஆண்டு நிறைவு விழாவின்போது அதனுடனான ஒருமைப்பாட்டையும் நட்புறவையும் உறுதிப்படுத்துகின்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இவ்விழாவை முன்னிட்டு PFLP தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

பலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையின்கீழ் பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்குள் உள்ள புரட்சிகர தேசிய ஜனநாயக சக்திகள், பலஸ்தீன பிரச்னை குறித்த தமது சரியான அணுகுமுறைகளின் மூலம் எல்லாத் தடைகளையும் வெற்றி கொண்டு, ஏகாதிபத்தியவாதிகளினதும் ஸயோனிஸவாதிகளினதும் சூழ்ச்சிகளையும் உபாயங்களையும் எதிர்த்து முறியடிக்க கூடிய ஒரு ஐக்கியப்பட்ட சக்திமிக்கதாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தை உருவாக்குவார்களென தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் நம்புகின்றது.

**சர்வதேசியம் நீடூழி வாழ்க!**

**பலஸ்தீன புரட்சி நீடூழி வாழ்க!**

**தமிழீழம் நீடூழி வாழ்க!**

"முதலாளித்துவத் தத்துவம் அல்லது சோசலிசத் தத்துவம். இவ்விரண்டில் ஒன்றைத்தான் தெரிந்தெடுக்க முடியும். இவ்விரண்டிற்கு நடுவே வேறு வழி கிடையாது.... ஆகவே, எந்த விதத்திலாவது சோசலிசத் தத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டாலும், அதிலிருந்து ஒரு மாத்திரை அளவாவது விலகிச் சென்றாலும், முதலாளித்துவத் தத்துவத்தை பலப்படுத்துவது என்றே பொருள்படும்."

—லெனின்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூட்டுறவுச் சங்க கொள்ளைகள்

U. N. P. அரசு பதவிக்கு வந்ததும் அதுவரை காலமும் அரசுடமையாக இருந்த பல தாபனங்களை தனியார் துறைக்கு கையளிக்க தொடங்கியது. இவ்வாறே கூட்டுறவுச் சங்கங்களை படிப்படியாக கைவிட ஆரம்பித்தது. இதன் பயனாக தென்னிலங்கையில் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்து மூடப்படலாயின.

வடக்கு, கிழக்கிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மாத்திரம் அரசின் நிராகரிப்புகளை மீறி தமது செயல்பாடுகளை ஆற்றிவந்தன.

மக்கள் நிர்வாக அமைப்புக்களில் இன்று தமிழ் மக்கள் கையில் இருப்பது இந்த கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே ஆகும். மக்கள் அதிகாரத்தை கையேற்பதற்காக போராடும் இந்த காலகட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களை பாதுகாத்து வருவதும், ஊழலை நீக்கி செழுமைப் படுத்தப்படுவதும் இதில் அதிக மக்களை பங்குகொள்ளுமாறு ஊக்குவிப்பதும் முக்கியமானதாகும். அத்தோடு போர்க்கால உணவுநெருக்கடிகளிலிருந்து வறிய மக்களைப் பாதுகாக்கவும் இது போன்ற அமைப்புக்களால் மட்டுமே சாத்தியமாகும்.

இன்று புதிதாகத் தோன்றியுள்ள சில இயக்கங்கள் கூட்டுறவுச் சங்கங்களை மக்களின் சொத்து என்ற உணர்வின்றி மீண்டும் மீண்டும் அவற்றைக் கொள்ளையடித்துவருகின்றன. இக்கொள்ளையினால் பல கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கமுடியாதநிலை ஏற்பட்டு பூட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இதுபோன்ற கொள்ளைகள் வன்மையாக கண்டிக்கப்படவேண்டியவையாகும். இச் செயல்முறையில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நிறுத்துவது மக்கள் நலனுக்கு அவசியமானதாகும்.

---

(முதற் பக்கத் தொடர்ச்சி)


பட்டினி போட்டும், பெரும் தொகையானோரை படுகொலை செய்தும் தமிழீழ மக்களுக்கு 'நல்ல பாடம்' புகட்ட ஸ்ரீலங்கா அரசு முனைந்துள்ளது. தமிழீழ மக்களை அடிபணிய வைக்கலாம் என்றும் விடுதலைப் போராளிகளை மக்களிடமிருந்து அந்நியப் படுத்தலாம் என்றும் ஆட்சியாளர்கள் கனவு காண்கிறார்கள்.

வரலாற்றில் இவை ஒன்றும் புதிய அனுபவங்களல்ல. வியட்நாம் மக்கள் இதனைவிட மோசமான ஒடுக்கு முறைகளை மீறி தமது வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தினார்கள். ஏகாதிபத்தியத்தை புறமுதுகிட்டு ஓட ஓட விரட்டினார்கள். பாலஸ்தீன் மக்களும், தென்னாபிரிக்க கறுப்பின மக்களும் இன்று இவ்வாறே போராடி வருகிறார்கள். இவற்றிலிருந்து ஏகாதிபத்தியமும் அதன் ஏவல் நாயான சிறீலங்கா அரசும் படிப்பினைகளையும் பெற்றதாகத் தெரியவில்லை.

வரலாற்றில் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்ட, ஏகாதிபத்தியங்கள் கற்றுக்கொள்ள மறுக்கும் அதே பாடங்களை தமிழீழ மக்கள் மீண்டும் ஒரு தடவை ஏகாதிபத்தியத்திற்கும் அதன் கூலிகளுக்கும் கற்பிக்கத்தான் போகிறார்கள். அனைத்து ஒடுக்கப்படும் மக்களுக்கும் தமிழ் மக்களின் விடுதலை ஆதர்சமால், வழிகாட்டியாய் விளங்கத்தான் போகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது வெறும் கற்பனையிலோ அல்லது மாயைகளிலோ ஏற்பட்டதல்ல. தமிழ் சமுதாயத்தின் அகப்புற முரண்பாடுகள் கூர்மையடைந்த வெளிப்பாடே போராட்டமாகும். மோசமான பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டு, வாழ்க்கையின் விளிம்பிற்கே தள்ளப்பட்டு மக்கள் தமது மீட்சிக்காக—தமது உயிர் வாழும் உரிமைக்காக நடத்தும் போராட்டத்தை அந்த இலட்சியத்தை அடையும்வரை என்ன விலைகொடுத்தாவது முன்னெடுப்பது தவிர்க்க முடியாத வரலாற்று விளைவாகும்.

★




செய்தி:— சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் தமிழ் கர்ப்பிணிப் பெண் மரணம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



PRIVATE CIRCULATION ONLY

# கிறீஸ்து மீட்பரின் செய்தி

அறியாமையிலும், அடிமைத்தனத்திலும், துன்பத்திலும் உழன்ற மக்களை மீட்பதற்கு கிறீஸ்து வந்தார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்தார்.

அடிமைப்பட்ட மக்களின் விடுதலைக்குப் பாடுபட்டார்.

சுரண்டுபவர்களை சாட்டை கொண்டு அடித்தார்.

ஒடுக்குமுறைக்கு எதிராக போராடினார்.

இப்படிப்பட்ட ஒரு உயர்ந்த போராளியை

ஒடுக்கப்பட்ட மக்களின் வழிகாட்டியை

அரசு-ஆளும் வர்க்கம்-தெய்வ நிந்தனை செய்பவர் என்றும், தேசத் துரோகி என்றும் தலைக்கு 30 காசு விலை பேசியது.

ஆம், கிறீஸ்த்து கைதானார்.

சிலுவையில் அறையப்பட்டார்.

அனைத்து மக்களின் துன்பங்களையும் தானே சுமப்பதாக சிலுவையில் அறையப்பட்ட நிலையிலும் பெருமை கொண்டார்.

ஆம்-கிறிஸ்து என்பார் விடுதலை வழிகாட்டி.

அடக்குமுறைகள் பெருகும்போது மீண்டும் அவர் வருவார்.

வெறும் மந்தை மேய்ப்பவனாக அல்ல

மக்களின் வழிகாட்டியாக.

ஊன்றுகோலுடன் மலைப்பிரசங்கம் செய்யமாட்டார்

ஆனால்........



ஒடுக்கும் வர்க்கம் மாபெரும் புரட்சியாளர்களை அவர்களுடைய வாழ்நாளில் ஓயாமல் வேட்டையாடிற்று. அவர்களுடைய போதனைகள் மீது காட்டுத்தனமான காழ்ப்பும் வெறித்தனமான வெறுப்பும்கொண்டு கயமையான பொய்ப்பிரச்சார அவதூறு இயக்கம் நடத்தின. அவர்கள் இறந்த பிற்பாடு அவர்களை அபாயமற்ற பூஜைப் பண்டங்களாக வழிபாட்டுக்குரியோராக்கவும் ஓரளவு அவர்களுடைய பெயர்களை புனிதப் பெயர்களாக்கவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஒடுக்கப்படும் வர்க்கங்களை 'ஆன்மதிருப்தி' பெறச்செய்வதும் அவற்றை ஏமாற்றுவதும் அதேபோல புரட்சியின் போதனையிடமிருந்து அதன் சாரப் பொருளைக் களைந்து அதன் புரட்சி முறையை மழுங்கடித்து அதை கொச்சைப்படுத்துவதுதான் இந்த முயற்சியின் நோக்கம்.

லெனின்

உங்கள் கையில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்புரட்சியாளரினதும் கடுமையான தடைகளை மீறியே வந்து சேருகிறது. ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணாக்காது எல்லோரும் படிக்க கொடுக்கவும்.

வெளியீடு: செய்தி-தொடர்பு திணைக்களம்-தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்